ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2115/11 - 2019 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2019.03.18
*2115/11 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தின், எட்டியாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், கித்துல்கல பலாத்த சிறு பிரிவில், இல. 134 பி, கித்துல்கல தெற்கு கிராம அலுவலர் பிரிவில், பரவலதென்ன கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. ப. கே. 783 இல் இலக்க 13 மற்றும் 2018.12.29 ஆந் திகதிய இறுதிக் கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1.2343 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏ தொடக்கம் டி எனக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :

1. **துண்டு A - காணியின் பெயர் : அஹஸ்லெனத் தோட்டம்; விஸ்தீரணம் : 0.5385 ஹெக்டயார்**

வடக்கு : களனி கங்கை; கிழக்கு : அஹஸ்லென தோட்டம்; தெற்கு: துண்டு பீ (வீதி); மேற்கு : அஹஸ்லென தோட்டம்.

2. **துண்டு B - காணியின் பெயர் : அஹஸ்லெனத் தோட்டம்; விஸ்தீரணம் : 0.0387 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு A மற்றும் அஹஸ்லென தோட்டம்; கிழக்கு : வீதி மற்றும் அஹஸ்லென தோட்டம்; தெற்கு : துண்டு D (வீதி) மற்றும் துண்டு C; மேற்கு : அஹஸ்லென தோட்டம் மற்றும் வீதி.

3. **துண்டு C - காணியின் பெயர் : அஹஸ்லெனத் தோட்டம்; விஸ்தீரணம் : 0.6263 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு B (வீதி) ; கிழக்கு : துண்டு D (வீதி) ; தெற்கு: அஹஸ்லென தோட்டம்; மேற்கு : அஹஸ்லென தோட்டம்.

4. **துண்டு D - காணியின் பெயர் : அஹஸ்லெனத் தோட்டம்; விஸ்தீரணம் : 0.0413 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு B (வீதி) மற்றும் அஹஸ்லென தோட்டம்; கிழக்கு : அஹஸ்லென தோட்டம்; தெற்கு : வீதி, அஹஸ்லென தோட்டம் மற்றும் துண்டு C; மேற்கு : துண்டு C.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். கே. சமன் அநுர,
பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,
யட்டியாந்தோட்டை.

*4 - 21*